# வகுப்பு - 8 - வரலாறு, 2. வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**பயிற்சி வினாக்கள்:**

1. 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர் _______.

   (1) சுஜா-உத்-தெளலா (2) சிராஜ்-உத்-தெளலா

   (3) மீர்காசிம் (4) திப்பு சுல்தான்

2. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு _______.

   (1) 1757 (2) 1764 (3) 1765 (4) 1775

3. பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை _______.

   (1) அலகாபாத் (2) கர்நாடக (3) அலிநகர் (4) பாரிசு

4. பாண்டிச்சேரி உடன்படிக்கையின் படி _______ கர்நாடகப்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

   (1) முதல் (2) இரண்டாம் (3) மூன்றாம் (4) ஏதுமில்லை

5. ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு _______.

   (1) 1756 (2) 1761 (3) 1763 (4) 1764

6. மங்களூர் உடன்படிக்கை _______, _______ இடையே கையெழுத்தானது.

   (1) பிரெஞ்சுகாரர் மற்றும் திப்பு சுல்தான்

   (2) ஹைதர் அலி மற்றும் மன்னர் சாமரின்

   (3) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்

   (4) திப்பு சுல்தான் மற்றும் மராத்தியர்கள்

7. மூன்றாம் ஆங்கில - மைசூர் போரின் போது ஆங்கிலேயத் தலைமை ஆளுநர்

   (1) இராபர்ட் கிளைவ் (2) வாரன் ஹேஸ்டிங்ஸ்

   (3) காரன்வாலிஸ் (4) வெல்லெஸ்லி

LIVEWORKSHEETS

8. ஆங்கிலேயருடன் பசீன் உடன்படிக்கை செய்துகொண்டவர் ______.

(1) இரண்டாம் பாஜிராவ் (2) தௌலத்ராவ் சிந்தியா

(3) ஷாம்பாஜி போன்ஸ்லே (4) ஷாயாஜி ராவ் கெய்க்வார்

9. மராத்திய பேரரசின் கடைசி பேஷ்வா ______.

(1) பாலாஜி விஸ்வநாத் (2) இரண்டாம் பாஜிராவ்

(3) பாலாஜி பாஜிராவ் (4) பாஜிராவ்

10. துணைப்படைத் திட்டத்தில் இணைந்து கொண்ட முதல் இந்திய சுதேச அரசு

(1) அயோத்தி (2) ஹைதராபாத் (3) உதய்பூர் (4) குவாலியர்

11. அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு

(1) 1755 (2) 1763 (3) 1757 (4) 1803

12. சிராஜ்-உத்-தௌலாவின் தலைமைப் படைத் தளபதி ______.

(1) மீர்காசிம் (2) மீர்ஜாபர் (3) ஆலம்ஷா (4) பாஜிராவ்

13. இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம்

(1) நாட்டை கைப்பற்றுதல் (2) வாரிசுரிமைப் போர்

(3) வணிகம் செய்ய (4) வரி வசூலித்தல்

14. இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜியத்தை விரிவுபடுத்துவதற்காக, வாரிசு இழப்புக் கொள்கையைக் கொண்டு வந்தவர் ______.

(1) காரன்வாலிஸ் பிரபு (2) வெல்லெஸ்லி பிரபு

(3) டல்ஹௌசி பிரபு (4) வில்லியம் பிரபு

15. திப்பு சுல்தானை இறுதியாகத் தோற்கடித்தவர் ______.

(1) வெல்லெஸ்லி பிரபு (2) டல்ஹௌசி பிரபு

(3) காரன்வாலிஸ் பிரபு (4) வில்லியம் பிரபு

16. திப்பு சுல்தான் இறப்புக்குப் பின் ______ வசம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது.

LIVEWORKSHEETS

(1) மராத்தியர்　　(2) டச்சுக்காரர்

(3) கிருஷ்ணராஜா-III　　(4) பிரெஞ்சுக்காரர்

17. 1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர் ______.

(1) காரன்வாலிஸ் பிரபு　　(2) வெல்லெஸ்லி பிரபு

(3) டல்ஹௌசி பிரபு　　(4) வில்லியம் பிரபு

18. அலிநகர் உடன்படிக்கை யார் யாருக்கு இடையே ஏற்பட்டது?

(1) சிராஜ்-உத்-தௌலா - இராபர்ட் கிளைவ்

(2) இராபர்ட் கிளைவ் - திப்பு சுல்தான்

(3) டல்ஹௌசி பிரபு - திப்பு சுல்தான்

(4) ஜோசப்ஸ்மித் - ஹைதர் அலி

19. இருட்டறைத் துயரச் சம்பவம் நடைபெற்ற இடம் ______.

(1) முர்ஷிதாபாத்　　(2) டில்லி

(3) மதராஸ்　　(4) கல்கத்தா

20. தஸ்தக் என்பது ______ வரி.

(1) மகசூல்வரி　(2) வீட்டுவரி　(3) சுங்கவரி　(4) குத்தகை

21. இரட்டை ஆட்சி முறையைக் கொண்டு வந்தவர் ______.

(1) இராபர்ட் கிளைவ்　　(2) டல்ஹௌசி பிரபு

(3) வெல்லெஸ்லி பிரபு　　(4) கவுண்டி-டி-லாலி

22. அடையாறு போரில் நவாப் படைக்குத் தலைமை வகித்தவர் ______.

(1) பாரடைஸ்　　(2) மாபூஸ்கான்

(3) கவுண்டி-டி-லாலி　　(4) நிஜாம்-உத்-தௌலா

23. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் முடிவில் எந்த உடன்படிக்கை ஏற்பட்டது?

LIVEWORKSHEETS

(1) அலகாபாத் (2) சால்பை (3) மதராஸ் (4) அய்லா-சப்பேல்

24. பிரெஞ்சு ஆளுநர் கோதேயூக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை

(1) மதராஸ் (2) பாண்டிச்சேரி

(3) அய்லா-சப்பேல் (4) அலகாபாத்

25. செயிண்ட் டேவிட் கோட்டை எங்குள்ளது?

(1) வந்தவாசி (2) கல்கத்தா (3) கடலூர் (4) ஆக்ரா

26. மதராஸ் உடன்படிக்கை நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1769 (2) 1755 (3) 1748 (4) 1765

27. ஆங்கிலேயப் படைத்தளபதி சர் அயர்கூட், ஹைதர் அலியைத் தோற்கடித்த இடம் ______.

(1) வந்தவாசி (2) கடலூர் (3) பரங்கிபேட்டை (4) மைசூர்

28. புரந்தர் உடன்படிக்கை யார் யாருக்கு இடையே ஏற்பட்டது ______.

(1) ஆங்கிலேயர் - ரகுநாதராவ் (2) வெல்லெஸ்லி - பேஷ்வா

(3) ஹேஸ்டிங்ஸ் - சிந்தியா (4) அப்டள் - பூனா பாதுகாப்புபடை

29. மராத்தியரின் கடைசி பேஷ்வா ______.

(1) இரண்டாம் பாஜிராவ் (2) முதலாம் பாஜிராவ்

(3) சிவாஜி (4) மாதராவ் சிந்தியா

30. இங்கிலாந்தில் உள்ள கிழக்கிந்தியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1786 (2) 1800 (3) 1833 (4) 1806

31. ________ சட்டத்தின் படி முதன் முதலில் போட்டித் தேர்வின் மூலம் அரசு ஊழியர் நியமனம் செய்தனர்.

(1) வங்காள (2) காந்தி - இர்வின் (3) வாரிசுரிமை (4) பட்டய

LIVEWORKSHEETS

32. ஐ.சி.எஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் ______.

(1) ரவீந்திரநாத் தாகூர் (2) ராமசாமி

(3) வல்லபாய் படேல் (4) சத்தியேந்திரநாத் தாகூர்

33. முதன் முதலில் காவல் துறை உருவாக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1790 (2) 1857 (3) 1795 (4) 1791

34. மதராஸ் உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1801 (2) 1803 (3) 1773 (4) 1775

35. கீழே உள்ளவர்களில் யார் ஏகாதிபத்தியவாதி?

(1) ரிப்பன் பிரபு (2) பென்னிகுக் (3) டல்ஹௌசி (4) திப்பு சுல்தான்

LIVEWORKSHEETS